**மல்லியம்பத்து ஊராட்சி தனி அலுவலர்/அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு ஜெ.ஜெரால்டு**

செ.மு.க..பி4/0156/2024 நாள்: **05.02.2024**

பொருள்: **புதிய வீட்டுமனைப்பிரிவு அனுமதி - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் - மல்லியம்பத்து ஊராட்சி - சர்வே எண்: 38/4A1A, 38/4A1B, 38/4A1C1, 38/4A1C2, 38/4A2 இல் கட்டுப்பட்ட 7200** சதுர மீட்டர் பரப்பளவில் புதிய வீட்டு மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது- இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1) திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர் அவர்களின் கடிதம் ந.க.எண்: TOQK9D50/7875/2023/TCP, நாள்: 16.12.2023
2) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994
3) மனுதாரர் திரு K.J. பழனிராஜா மற்றும் P. கதிர்வேல் ஆகியோரின் விண்ணப்பம், நாள்: 04.01.2024
4) அந்தநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) அவர்களின் தல ஆய்வு நாள்: 19.01.2024
5) மல்லியம்பத்து ஊராட்சி மன்ற தீர்மானம் எண்: 80, நாள்: 24.01.2024
6) இவ்வலுவலக ந.க.பி4/0156/2024, நாள்: 24.01.2024

*********

உத்தரவு:

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் மல்லியம்பத்து ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்: 38/4A1A, 38/4A1B, 38/4A1C1, 38/4A1C2, 38/4A2 இல் கட்டுப்பட்ட 7200 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய வீட்டு மனைப்பிரிவில் 43 மனைகளாக பிரிக்கப்பட்டு பார்வை 1இல் காணும் கடிதத்தின்படி தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி எண்: TOQK9D50/ 7875/2023/TCP- இன்படி புதிய வீட்டுமனைப்பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய வீட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதலுக்கு உள்ளாட்சி வளர்ச்சிக் கட்டணமாக ரூ.52,953/-/-(ரூபாய் ஐம்பத்து இரண்டாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து மூன்று மட்டும்) “Special Officer/Malliyampathu Village Panchayat, Payable at Trichy ” என்ற பெயரில் வங்கி வரைவாக பெற்று (வங்கி வரைவு எண்: 299829/dt.03.02.2024/Panjab National Bank) மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.மேலும் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலைகள் மற்றும் பொது இடம் (OSR Land) தானபத்திரத்தின் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. (தான பத்திரம் எண்: 10015/2023/நாள்: 06.12.2023)

எனவே, பார்வை 1 இல் காணும் திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையிலும், உரிய கட்டணங்கள் செலுத்தியதன் அடிப்படையிலும் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலும் மேற்படி புதிய குடியிருப்பு மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1) இப்புதிய வீட்டுமனைப்பிரிவு நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்கசான்றின் சரித்தன்மையை திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்த புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2) ஏற்கனவே ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் தற்போது ஒப்படைக்கப்படும் சாலைகள் மனுதாரர் தனது சொந்த செலவில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

3) அரசு புறம்போக்கு நிலம், நீர்நிலைகள் மறைக்கப்பட்டு மனைப்பிரிவு அமையுமாயின் இந்த ஒப்புதல் செல்லத்தக்கதல்ல.

4) முழுமை திட்ட சாலை மற்றும் விரிவு அபிவிருத்தி திட்ட சாலை இவற்றில் மனைப்பிரிவு அமையுமாயின் இந்த உத்தரவு செல்லத்தக்கதல்ல.

தனி அலுவலர்/பல்லியம்பத்து ஊராட்சி
(ம) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், அந்தநல்லூர்

5/2/24

பெறுநர்:

209
05/02/2024

திரு K.J. பழனிராஜா மற்றும்
P. கதிர்வேல்,
37, வெங்கடேஸ்வரா நகர்,
திருவானைக்கோவில்,
திருச்சிராப்பள்ளி-05

நகல்: இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
காஜாமலை, காஜா நகர்,
திருச்சிராப்பள்ளி-23

நகல்:
சார் பதிவாளர்,
உறையூர் சார் பதிவு அலுவலகம்,
(இ) மருதாண்டாக்குறிச்சி,
குழுமணி ரோடு, திருச்சிராப்பள்ளி (பதிவஞ்சலில்)